POSTAL REGD NO: TN / TV

தின தரணி

காலை நாளிதழ்

DINA THARANI

காலை நாளிதழ்

# மதுரையில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கான கருத்தரங்கம்

மதுரை ஜுன் 28

காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் சார்பில் சித்திரவதையால் பாதிக்கப் பட்டோர்க்கான ஐ.நா.வின் சர்வதேச ஆதரவு நாள் கருத்தரங்கம் தமிழ்நாடு ஓட்டலில் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சியினர், இயக்க செயற்பாட்டாளர்கள், காவல்துறை அதிகாரிகள், மனித உரிமைக் காப்பாளர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வில் தலைமை உரையாற்றிய காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தின் செயலர் மீ.த.பாண்டியன் பேசும் போது, சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் காவல் மரணத்திற்குப் பின் அனைத்து அரசியல் கட்சிகள், 60க்கும் மேற்பட்ட இயக்கங்கள் அடங்கிய "காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்" உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

இதனைத் தொடர்ந்து காவல் விசாரணை, கைது குறித்து தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் சைலேந்திர பாபு அவர்கள் காவல்துறை

யினருக்கு சுற்றறிக்கை மூலம் வெளியிட்ட 41 வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய பதாகை வெளியிடப்பட்டது. இதை தமிழ்நாடு நான்காம் காவல் ஆணைய உறுப்பினர், மனோதத்துவ மருத்துவர் ராமசுப்ரமணியன் வெளியிட மதுரை மாநகர காவல்துறை ஆணையர் சார்பாக மதுரை மாவட்ட நில அபகரிப்பு பிரிவு ஆணையர் ஆனந்த் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மருத்துவர் ராமசுப்ரமணியன் பேசும்போது, "நீதிபதி செல்வம் தலைமையில் உள்ள தமிழ்நாடு நான்காம் காவல் ஆணையம் விரைவில் காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்க உறுப்பினர்களைச் சந்திக்க உள்ளது" என்று தெரிவித்தார்.

மூத்த வழக்கறிஞர் ஹென்றி திபேன் சித்திரவதையால் பாதிக்கப்பட்டோர் ஆதரவு நாளின் முக்கியத்துவம் பற்றி கூறினார். மேலும் காவல்துறையினர்க்கான 41 வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கிய தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களைப் பாராட்டி பேசிய போது நீதிமன்றம் மூலம் போராடி பெற வேண்டிய நெறிமுறைகளை டி.ஜி.பி சைலேந்திர பாபு சுற்றறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.



இது காவல் சித்திரவதையை மட்டுப்படுத்தும் முன்னுதாரண நடவடிக்கை என்று குறிப்பிட்டார். காவல்துறையில் அடிமட்ட நிலையில் திறம்பட பணியாற்றும் மண்டல காவல்துறை தலைவர்கள், மாநகர காவல்துறை ஆணையர்கள், மாநகர காவல்துறை கூடுதல் ஆணையர்கள் மூலம் தரமான, நம்பகத்தன்மையுடைய கண்காணிப்பை அங்கீகரிப்பதன் மூலம் மேலே குறிப்பிட்ட "41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கையை" அர்த்தமுள்ளதாக செயற்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஷாஜி செல்லன் அவர்கள் பேசும் போது, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அனைத்துக் காவல்நிலையங்களிலும் சி.சி.டி.வி கேமரா இருக்க வேண்டும், காவல் நிலையத்தின் நுழைவு வாயில், வெளியேறும் வாயில், கைதி அறையின் வெளிப்பகுதி, வராண்டா, வரவேற்பறை, காவல் ஆய்வாளர் அறை, சார்பு ஆய்வாளர் அறை, காவல்நிலைய சுற்று பகுதி, காவல் நிலைய பின் பகுதி ஆகிய இடங்களில் சி.சி.டி.வி கேமரா இருக்க வேண்டும். இரவிலும் தெளிவாக ஒளிப்பதிவு செய்யும் தொழில்நுட்பத்துடன் கேமரா இருக்க வேண்டும். அதன் பதிவானது குறைந்தது 18 மாதங்களாவது பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரிவாக எடுத்துரைத்தார். மேலும் உடல் கூறாய்வு பற்றி சந்தோஷ் எதிர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பு பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

சிறப்புரையாற்றிய மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா பேசும் போது, "சித்திரவதையை செய்பவர்கள் காவல்துறையினர், பாதிப்படைபவர்கள் பாமரமக்கள் என்று நாம் நினைத்தால் அது தவறு. இன்றைய இந்தியாவில் அரசின் தவறைச் சுட்டிகாட்டுபவர்கள் அரச பயங்கர வாதத்தால், கொடுங்கோன்மையால் பாதிக்கப் படுகின்றனர்.

இந்தியாவில் வாழும் உரிமை கேள்விக்குறியாக உள்ளது. அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பைச் சேர்ந்த ஆகாஷ் என்பவர் 2014 ல் ஆங்கில பத்திரிக்கை ஒன்றில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அதில் குஜராத் கலவரம் பற்றிய உண்மைகளைப் பேசியவர்கள் மீதே பொய் வழக்குப் போடும் நிலையில் கலவரத்தில் சங்பரிவார்களின் பங்களிப்பை மிகத் தெளிவான ஆதாரங்களோடு திரட்டி பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கும் தீஸ்தா செதல்வாட் அவர்களின் நிலை மோடி பிரதமரானால் என்ன ஆகும் நான் கவலையோடு எதிர்நோக்குகிறேன் என்று குறிப்பிட்டிருந்தார். எட்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் சொன்னது சித்திரவதைக்கு எதிரான ஐ.நாவின் சர்வதேச ஆதரவு நாளைக் கடைப்பிடிக்கும் போது தீஸ்தா செதாவத் சிறையில் அடைக்கப்

பட்டுள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் வழக்கு தொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இந்தியாவின் எதிர்காலம் கவலைக்குரியதாக உள்ளது. புல்டோசர்களைக் கொண்டு அரசு வீடுகளை இடிக்க வில்லை, இந்திய அரசமைப்புச் சட்டத்தையே இடிக்கிறார்கள்.

நாம் வாழக்கூடிய மதச்சார்பற்ற இந்தியாவின் முச்சந்தியில் நின்று கொண்டிருக்கிறோம்மிகவும் மோசமான ஒரு சூழலில் இருக்கிறோம். எனவே காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டமைப்பு தமிழக எல்லைளைத் தாண்டி செயற்பட வேண்டிய தேவை உள்ளது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பேசிய அனைவரும் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையை இந்தியா ஏற்புறுதி செய்ய வேண்டும். சித்திரவதையற்ற உலகு படைக்க அனைவரும் இணைந்து செயலாற்றுவோம் என்று வலியுறுத்தினர்.